இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 67 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 31 – வெள்ளிக்கிழமை 17 அக்டோபர் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 67 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 31 - Friday 17 October 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## எத்தகைய கூட்டணியானாலும் பழனிசாமிக்கு பலன் தராது; எப்படிப்பட்ட கூட்டணி அமைத்தாலும்

# அ.தி.மு.க.வுக்கு மக்கள் தக்க பாடம் கற்பிப்பர்!

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணித்தரமான பதில்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.10.2025) சட்டமன்றப் பேரவையில், கரூர் சம்பவம் தொடர்பாக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கி பேசினார்.

சென்னை, அக். 17-

**“எத்தகைய கூட்டணியானாலும் பழனிசாமிக்குப் பலன் தராது; எப்படிப்பட்ட கூட்டணி அமைத்தாலும் அ.தி.மு.க.வுக்கு மக்கள் தக்க பாடம் கற்பிப்பர்” என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமிக்கு ஆணித்தரமான பதிலளித்தார்.**

சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரம் முடிவுற்றதும் கரூர் சம்பவம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு எடுத்த நடவடிக்கைகளை விவரித்து ஒரு விவர அறிக்கை அளித்து பேசினார். அப்போது எதிர்க்கட்சித் தலைவர் நாங்கள் விதி 56 இன் கீழ் கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்து இருக்கின்றோம். அதில் என்னை பேச அனுமதியுங்கள் என்று கூறினார்.

அப்போது பேரவைத்தலைவர் அவர்கள் முதல்வர் அவர்கள் விளக்கம் அளித்த பின் தங்களுக்கு அனுமதி அளிக்கிறேன் என்று கூறியதைத் தொடர்ந்து கரூர் சம்பவம் குறித்து முதல்வர் அவர்கள் விளக்கம் அளித்து பேசினார்.

அதனைத் தொடர்ந்து கரூர் சம்பவம் குறித்து விதி 56 இன் கீழ் தகவல் கோரலாக பேரவைத் தலைவர் அறிவித்து அதில் எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிச்சாமியை பேச அழைத்தார். எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி பேசும் போது, தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தை தவிர்த்திருக்கலாம் என்று அரசு நடவடிக்கைகளை குறை கூறி பேசினார்.

அதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனுக்குடன் பதிலளித்தார். மேலும் எடப்பாடி பழனிச்சாமியின் பேச்சுக்கு அவை முன்னவர் துரைமுருகன், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, எஸ். ரகுபதி, மா.சுப்பிரமணியன், எஸ்.எஸ்.சிவசங்கர் உள்ளிட்ட அமைச்சர்கள் உடனுக்குடன் பதிலளித்தனர்.

எடப்பாடி பழனிச்சாமி கரூர் சம்பவம் குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகளை மீண்டும் , மீண்டும் குறை கூறி பேசியபோது அவரது பேச்சுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டணிக்கு கட்சியைச் சேர்க்கும் உள்நோக்கத்துடன் அரசியல் ஆதாயத்துக்காக பேசுகிறார் என்று கூறினார்.

உள்நோக்கத்துடன் என்ற வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி பேசியதும், அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று அதனை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று குரல் கொடுத்தனர்.

### நடவடிக்கை எடுத்த முதல்வரைப் பாராட்ட வேண்டாமா?

அப்போது அவை முன்னவர் துரை முருகன் அவர்கள், இரவோடு இரவாக தூங்காமல் தனி விமானம் மூலம் கரூர் சென்று மக்களைச் சந்தித்து நடவடிக்கை எடுத்த முதல்வர் அவர்களை பாராட்ட வேண்டாமா என்று கேட்டதும், முதல்வர் அவர்கள் ஆம், எனது கடமை தான், தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூடு நடந்த போது முதல்வராக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொன்னார் தெரியுமா? என்று கேட்டதும் எடப்பாடி பழனிச்சாமி கள்ளக் குறிச்சி சம்பவத்தை சுட்டிக் காட்டி பேசினார்.

அப்போது முதல்வர் அவர்கள் கள்ளக் குறிச்சி சம்பவம் வேறு, அங்கு விஷச்சாராயம் குடித்து உயிரிழந்தார்கள்; அமைச்சர்கள் அனைவரும் சென்றார்கள், ஆனால் கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி அப்பாவி மக்கள் பலியானார்கள் என்று கூறியதும், கூட்ட நெரிசல் சம்பவம் குறித்து அரசு அதிகாரிகள் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தது ஏன் என்று கேட்டார்.

அதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வேண்டுமென்றே அரசியல் உள்நோக்கத்துடன் சமூக வலைதளங்களில் அரசுக்கு எதிராக தவறான கருத்துகளை பரப்பியதால் தான் அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். மேலும் முதல்வர் அவர்கள் கடந்த காலங்களில் கொரோனா காலத்தில் அதிகாரிகள் பதிலளிக்கவில்லையா, எம்.ஜி.ஆர். காலத்திலும், ஜெயலலிதா காலத்திலும் அரசு அதிகாரிகள் பதிலளித்துள்ளனர்; அதிகாரிகள் அரசியல் ரீதியாக பதில் சொல்லவில்லை, அலுவல் ரீதியாகப் பதில் சொல்லி இருக்கிறார்கள் என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் சிவசங்கர், அ.தி.மு.க. ஆட்சியில் தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு நடைபெற்ற சம்பவத்தை சுட்டிக்காட்டி பேசியதும் எடப்பாடி பழனிச்சாமி உள்பட அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேசியதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். அதே போன்று கழக உறுப்பினர்களும் எழுந்து நின்றனர். இதனால் பேரவையில் சிறிது நேரம் கூச்சல் ஏற்பட்டது.

அப்போது அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் பேரவைத் தலைவருக்கு எதிராக முழக்கமிட்டபடி பேரவைத் தலைவருக்கு முன்பு எடப்பாடி பழனிச்சாமி உள்பட அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் அமர்ந்து முழக்கமிட்டவாறு, அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேசியதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கவேண்டும் என்றும் தரையில் அமர்ந்து முழக்கமிட்டவாறே இருந்தனர்.

இந்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் சிவசங்கர் பேசிய அந்த வார்த்தையை நீக்க வேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக் கொண்டார்.

பேரவைத்தலைவர் அவர்களும் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேசியதில் எதை நீக்க வேண்டும் கூறுங்கள் அதனை ஆராய்ந்து நான் நீக்குகிறேன் என்று கூறியதையும் எடப்பாடி பழனிச்சாமி உள்பட எவரும் எந்த வார்த்தையை நீக்க வேண்டும் என்று சொல்லாமல் அமளியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவை முன்னவர் அவர்களும் அமைச்சர் சிவசங்கர் பேசியதில் எதனை நீக்க வேண்டும் என்று கூறுங்கள். அதனை பேரவைத் தலைவர் நீக்குகிறேன் என்று சொல்லி விட்டார். இன்னும் ஏன் இப்படி அமர்ந்து இருக்கிறீர்கள் என்று கூறினார்.

எனினும் எடப்பாடி பழனிச்சாமி உள்பட அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் அதனை பொருட்படுத்தாமல் தாங்கள் வெளிநடப்பு செய்வதாகக் கூறி வெளிநடப்பு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, ஒரு நபர் ஆணையம் அமைத்ததற்கு பின்பு, ஏன் அதிகாரிகள் பேட்டிக் கொடுத்தனர் என்று ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு விசாரணை ஆணையம் இதே திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள் தலைமையில் அமைத்ததற்கு பிறகு, அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சராக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே செய்தித்தாள்களில் பேட்டியும் கொடுத்திருக்கிறார்கள்; பேசியும் இருக்கிறார்கள். அந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது Unavoidable எனப் பேசியிருக்கிறார்கள். ஆகையினால், அதிகாரிகள் பேட்டிக் கொடுத்தது என்பது தவறல்ல.**

**அதுமட்டுமல்ல; இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.வைப் பொறுத்தவரைக்கும், திட்டமிட்டு எப்படியாவது ஒரு கலவரத்தை ஏற்படுத்த வேண்டும். வெளிநடப்பு செய்ய வேண்டும் அல்லது வெளியேற்றப்பட வேண்டும். இப்படி ஏதாவது ஒரு சூழ்நிலையை இங்கு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் திட்டமிட்டு வந்திருக்கிறார்கள். இது அவர்கள் பேசிய பேச்சிலிருந்தே தெரியும். அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் யாராவது பாதிக்கப்பட்டாலும்கூட இப்படி ஒரு போர்க் குரல் வந்திருக்குமா என்பது எனக்குத் தெரியவில்லை.**

**ஆனால், இன்றைக்கு இப்படி குரல் வந்ததற்குக் காரணமே, கூட்டணி இன்னும் சரியாக அமையவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மெகா கூட்டணி; மகா கூட்டணி என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி கூட்டணி அமைப்பதற்கான முயற்சி தான் இது. என்னதான் கூட்டணி அமைத்தாலும், அது அமையப்போவதில்லை. அப்படியே அமைத்தாலும், மக்கள் இவர்களுக்கு சரியாக பாடத்தை புகட்டுவார்கள் என்பது தான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

---

## கரூர் சம்பவம்:


# உச்சநீதிமன்றத்தின் பிழையான உத்தரவு!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கம்!

சென்னை, அக். 17 -

**கரூர் துயர சம்பவம் குறித்த உச்சநீதிமன்றத்தின் சி.பி.ஐ. விசாரணை உத்தரவு பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளதோடு, புதிய சிக்கல்களை உருவாக்கியிருப்பதாக ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது**

‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் வெளியாகியுள்ள தலையங்கத்தில், கரூரில் விஜய் பரப்புரையில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உச்சநீதிமன்றம் இடைக்கால உத்தரவிட்டுள்ளது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



THE HINDU

**Flawed order**

The transfer of the Karur case to the CBI raises troubling questions

More than two weeks have passed since 41 people died after a crowd crush at a political rally of actor-politician Vijay and his party, the Tamilaga Vettri Kazhagam (TVK) in Karur. Yet, far from establishing culpability, the judicial response risks prioritising political narrative over factual inquiry. On October 13, the Supreme Court of India's intervention, transferring the investigation to the Central Bureau of Investigation (CBI) and appointing a supervisory committee, was ostensibly meant to restore order after procedural disarray at the Madras High Court.

உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவு, பல்வேறு கேள்விகளை எழுப்புவதுடன், புதிய சிக்கல்களை உருவாக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கில் சி.பி.ஐ. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துவிட்டால், மாநில காவல்துறையினரால் மீண்டும் விசாரணையை துவங்க முடியாது என்ற நிலையில், இந்த உத்தரவு நீதிமன்றத்தின் சமமான அணுகுமுறையில் சிக்கலானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு மீது த.வெ.க.வினர் திட்டமிட்டு அவதூறு கூறும் போது, அந்த குற்றச்சாட்டுகளுக்கு மாநில அரசு அதிகாரிகள் உரிய விளக்கம் அளிப்பதற்கு தடையை ஏற்படுத்தும் வகையில் இந்த உத்தரவை கருத வேண்டியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கரூரில் பிரச்சாரக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த த.வெ.க. மற்றும் அக்கட்சி தலைவர்களின் பொறுப்பு பற்றி உத்தரவில் குறிப்பிடப்படாததை சுட்டிக்காட்டியுள்ள தி இந்து ஆங்கில நாளேடு, கரூர் துயரம் தொடர்பான வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்ற வேண்டும் என்பதற்கு கூறப்பட்ட காரணம் பலவீனமானது என தெரிவித்துள்ளது.

விஜயும் அவரது ஆதரவாளர்களும் இச்சம்பவம் ஒரு சதி என்று குற்றச்சாட்டு கூறும் போது, அதற்கு அதிகாரிகள் உரிய தகவல்களுடன் மறுப்பு தெரிவிக்காமல் இருக்க முடியுமா? அதனால்தான் உரிய அத்தாட்சிகளுடன், குறிப்பாக அப்போது எடுக்கப்பட்ட வீடியோ ஆதாரங்களுடன் அதிகாரிகள் விளக்கமளித்தனர். இது எந்த வகையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைக்கு பாதிப்பு ஏற்படுத்தி விடாது.

இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றியது உறுதியற்ற ஒன்று தான். கூண்டில் அடைக்கப்பட்ட கிளி போன்ற நிலை என்று ஒருமுறை நீதிமன்றமே இதுபற்றி குறிப்பிட்டது குறிப்பிடத்தக்கது.

மேற்கு வங்க அரசுக்கும் ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு குழுவுக்கும் இடையேயான வழக்கு ஒன்றிய, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடுவது பற்றி எச்சரிக்கை விடுக்கப்பட்டதை ‘தி இந்து’ சுட்டிக்காட்டியுள்ளது.

உள்ளூர் போலீசார் மீது ஒரு அரசியல் கட்சி சில குற்றச்சாட்டுகளை கூறி விடுவதாலேயே இவ்வாறு சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றப்படுவது பொருத்தமா என்று அந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளதை தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவல்துறையினரில் செயல்படாத நிலை மற்றும் பொது மக்களை கட்டுப்படுத்தாத நிலை குறித்து மட்டுமே தெரிவித்துள்ள நீதிமன்ற உத்தரவு. த.வெ.க. பற்றியோ அதன் தலைவர்களின் பொறுப்பற்ற நிலை பற்றியோ குறிப்பிடப்படவில்லை, என்றும் ‘தி இந்து’ குறிப்பிட்டுள்ளது.


கரூர் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவருக்கு தெரியாமலேயே அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான குற்றச்சாட்டுகளையும் உச்ச நீதிமன்றம் கவனத்தில் கொண்டு விசாரிக்க வேண்டும் என ‘தி இந்து’ ஆங்கில நாளேடு வலியுறுத்தி உள்ளது.

---

### தடைகளை கல்வியைக் கொண்டு கடந்திடலாம் என்று

## வாழ்ந்து காட்டிய அறிவியல் மேதை அப்துல் கலாம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



சென்னை, அக்.17-

**முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-**

*எப்படிப்பட்ட தடையையும் கல்வியைக் கொண்டு கடந்திடலாம், வாழ்வில் உயர்ந்திடலாம் என்று வாழ்ந்து காட்டிய அறிவியல் மேதை - முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாள் இன்று!*

*உயர்கல்விக்காக நமது திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை நமது மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு, இந்தியாவின் முன்னேற்றத்துக்கும் தன்னிறைவுக்கும் உழைத்தால், அதுதான் அப்துல் கலாம் ஐயா அவர்களுக்குச் செலுத்தும் மிகச்சிறந்த நன்றிக் கடன்.*

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.